-054

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# FIRST YEAR EXAMINATIONS IN BACHILOR OF COMMERCE (EXTERNAL) – 2011/2012

HELD IN APRIL / MAY 2013

## B.COM 16(I) – FINANCIAL ACCOUNTING - I

கல்குலேட்டர்கள் அனுமதிக்கப்படும் . எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கு

நேரம்: 03 மணித்தியாலங்கள் .

---

01

i. கணக்கியல் என்றால் என்ன? சிறந்தகணக்கியல் தகவல்களின் சிறப்பம்சங்கள் யாவை? அவற்றை சுருக்கமாக விளக்குக?

(5 புள்ளிகள்)

ii. "கணக்கியல் எண்ணக்கருக்களும், கொள்கைகளும் கணக்கியலின் அடிப்படைகள்"இக் கூற்றினை சுருக்கமாக விளக்குக?

(4 புள்ளிகள்)

iii. பின்வருவனவற்றை வேறுபடுத்துக,

(அ) அட்டு எண்ணக்கருவும், இணைத்தல் எண்ணக்கருவும்

(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்றில் நேர் முறையும், நேரில் முறையும்

(இ) மூலதனக் கணக்கில் பங்கிலாபம், வட்டிசேர்ந்தது, பங்கிலாபம் வட்டி சேராதது
(Cum Div/ Int, Ex Div/ Int)

(ஈ) எண் கூட்டுமுறையும், அக்சூரியல் முறையும்
(Sum of digit, Actuarial)

(உ) ஒப்பந்தக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மை இலாபமும், வெளிப்படையான இலாபமும்

(ஊ) விபரமானமுறை, பிரசுரமுறை

(எ) ஒப்பந்தக் கணக்கில் உறுதிப்படுத்தப்பட்ட வேலையும், உறுதிப்படுத்தப்படாத வேலையும்

(7x3= 21புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

02. பின்வருபவை இரண்டு ஆண்டுகளுக்கான ஐந்தொகைகளும், 31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டகளுக்கான ஈஸ்டன் நிறுவனத்தின் வருமானக் கூற்றுமாகும்.

### 31.03.2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று

| | ரூபா |
|---|---|
| விற்பனைகள் | 925,000 |
| வட்டிவருமானம | 7,000 |
| பொறி இயந்திரவிற்பனை இலாபம் | 6,000 |
| | 938,000 |
| விற்றசரக்கின் கிரயம் | 669,000 |
| பெறுமானத் தேய்வுசெலவுகள் | 98,000 |
| விற்பனை,நிரவாகச் செலவுகள | 70,000 |
| வட்டிச் செலவுகள் | 22,000 |
| முதலீட்டுவிற்பனைநட்டம் | 9,000 |
| | 868,000 |
| வரிக்கும் அசாதரணநடவடிக்கைக்கும் முன் இலாபம் | 70,000 |
| வரி | (30,000) |
| அசாதரணநடவடிக்கைக்குமுன் இலாபம் | 40,000 |
| அசாதரணநடவடிக்கை: | |
| இயற்கைஅழிவுக்கானகாப்புறுதிபெறுவனவு | 3,000 |
| | 43,000 |

### 31.03.2011, 31.03.2012 இல் உள்ளவாறான ஐந்தொகை

| | 2011 | 2012 |
|---|---|---|
| பங்காளர் நிதி: | | |
| உரிமை மூலதனம | 200,000 | 350,000 |
| இலாபநட்டக் கணக்கு | 53,000 | 71,000 |
| | 253,000 | 421,000 |

| | | |
|---|---|---|
| **கடன் நிதி:** | | |
| பிணையளிக்கப்பட்ட கடன்கள் | 137,00 | 60,000 |
| பிணையளிக்கப்படாத கடன்கள் | 119,000 | 167,000 |
| | 256000 | 227000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்:** | | |
| செல்மதி உண்டியல்கள் | 73000 | 81000 |
| கடன் கொடுத்தோர் | 120000 | 98000 |
| வருமானவரி செலுத்த வேண்டியது | 20000 | 35000 |
| | 213000 | 214000 |
| மொத்தநிதி மூலங்கள் | 722000 | 862000 |
| **நிலையான சொத்துக்கள்:** | | |
| பொறி, இயந்திரம் - கிரயம் | 818000 | 973000 |
| கழி. திரண்டபெ. தேய்வு | (505000) | (552000) |
| | 313000 | 421000 |
| முதலீடுகள் | 142000 | 117000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| இருப்புக்கள் | 118000 | 176000 |
| கடன் பட்டோர் (கழி. ஐ. கடன்களுக்கான ஏற்பாடுரூபா 9000, ரூபா 7000) | 93000 | 125000 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 5000 | 3000 |
| காசும்,காசுக்குசமமானவர்களும் | 51000 | 20000 |
| | 267000 | 324000 |
| மொத்த நிதிப் பிரயோகம் | 722000 | 862000 |

வருடகாலத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகள் பின்வருமாறு

1. ரூபா 173000 பெறுமதியான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.

2. ரூபா 67000 கிரயமுடையதும், திரண்டபெ. தே. ரூபா 51000 உடையதுமான இயந்திரம் ஒன்று ரூபா 22000 இற்கு மேல் விற்பனை செய்யப்பட்டது.
3. ரூபா 26000 பெறுமதியான முதலீடுகள் கொள்வனவுசெய்யப்பட்டது.
4. ரூபா 51000 பெறுமதியானமுதலீடுகள் ரூபா 42000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.
5. பிணையளிக்கப்படாத கடனுக்குரூபா 49000 பெறுமதியான இயந்திரங்கள் கொளவனவு செய்யப்பட்டது.
6. ரூபா 100000 பெறுமதியான பங்குகள் முகவிலையில் வழங்கப்பட்டது.
7. ரூபா 50000 பெறுமதியான பிணையளிக்கப்பட்ட தொகுதிக் கடன்கள் ஒவ்வொன்றும் 10 ரூபாவான உரிமைப் பங்குகளாக மாற்றம் செய்யப்பட்டது.
8. ரூபா 25000 பங்கிலாபமாகசெலுத்தப்பட்டது.
9. பிணையளிக்கப்படாத கடன் ரூபா 1000 மீள செலுத்தப்பட்டது.
10. பிணையளிக்கப்பட்ட தொகுதிக் கடன்கள் ரூபா 27000 முகவிலையில் மீட்கப்பட்டது.
11. ஒருவாடிக்கையாளர் முறிவடைந்ததன் காரணமாக (Insolvent) ரூபா 12000 ஐயக் கடன்களுக்கான ஏற்பாடாக மேற்கொள்ளப்பட்டது. இது விற்பனை நிருவாக செலவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
12. பூமியதிர்வினால் ஏற்பட்ட நட்டத்துக்கான காப்புறுதியாக ரூபா 3000 செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது.

நேரில் முறையினை பயன்படுத்தி ஒரு காசுபாய்ச்சல் கூற்றினைத் தயார் செய்க.

(30 புள்ளிகள்)

03. அலிநிறுவனம் தனது பொருட்களை கொல்கலன்களில் விற்பனை செய்கின்றது. ஒவ்வொரு கொல்கலன்களும் வாடிக்கையாளர்களுக்கு ரூபா 125 ஆக பட்டியலிடப்படுகின்றது. அத்துடன் அவைகள் நல்ல நிலைமையில் திருப்பப்படுமாயின் அவர்களது கணக்கில் ஒவ்வொரு கொல்கலனுக்கும் ரூபா 110 செலவு வைக்கப்படுகின்றது. வருட காலப்பகுதியில் பின்வரும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

- 40000 கொள்கலன்கள் ரூபா 36000 க்கு கொள்வனவு செய்யப்பட்டது.
- வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கொள்கலன்கள் - 15000
- வாடிக்கையாளரால் திருப்பப்பட்ட கொள்கலன்கள் - 14000
- வருடகாலப்பகுதியில் பாதிக்கப்பட்ட கொல்கலன்கள் - 100

- வருடகாலப்பகுதியில் பகுதியளவில் (Scrapped)பாதிக்கப்பட்டகொள்கலன்கள் - 200

வருட இறுதியில் வாடிக்கையாளரால் திருப்பப்பட வேண்டிய கொல்கலன்கள் - 600

கொல் கலன்கள் பழதுபார்த்தல் செலவுகளும், ஏனைய செலவுகளும் முறையே ரூபா 6000 வும் ரூபா 8000 வும் ஆகும்.

இருப்பு மதிப்பீட்டு நோக்கத்துக்காக ஒவ்வொரு கொல்கலன்களும் ரூபா 80 ஆக மதிப்பிடப்படுகின்றது.

பகுதியளவில் பாதிக்கப்பட்ட கொள்கலன்கள் ஒவ்வொன்றும் ரூபா 50 ஆக விற்பனை செய்யப்பட்டது.

தயாரிக்குக,

i. கொள்கலன் இருப்புக் கணக்கு
ii. கொள்கலன் ஒதுக்ககணக்கு
iii. கொள்கலன் வியாபாரக் கணக்கு
iv. கொள்கலன் வாடிக்கையாளர் கணக்கு

(20 புள்ளிகள்)

04. பின்வருபவை ஒருகட்டிட ஒப்பந்தம் சம்மந்தமானவையாகும்,ஒப்பந்தப் பெறுமதிரூபா 1000000 ஆகும். இதில் கட்டிடகலைஞர்களால் உறுதிப்படுத்தப்படும் வேலையில் 80% ஐ வாடிக்கையாளர் செலுத்துகின்றார். கட்டிடநிர்மாணிபானது மூன்றுவருடங்களாகும்.

| | 1வது ஆண்டு ரூபா | 2வது ஆண்டு ரூபா | 3வது ஆண்டு ரூபா |
|---|---|---|---|
| மூலப் பொருள் வழங்கல் | 120000 | 145000 | 84600 |
| நேர் ஊழியம் | 110000 | 155000 | 110000 |
| நேர் செலவுகள் | 5000 | 17000 | 6000 |
| நேரில் செலவுகள் | 2000 | 2600 | 5000 |
| உறுதிப்படுத்தப்பட்டவேலை | 235000 | 750000 | 1000000 |
| உறுதிப்படுத்தப்படாதவேலை | 2800 | 8000 | - |

| | | | |
|---|---|---|---|
| பொறிவழங்கல் | 14000 | Nil | - |
| வேலைத்தளத்திலுள்ள மூலப் பொருள் | 2000 | 500 | 8000 |

முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளின் இறுதியில் பொறியானது பெறுமதி முறையே ரூபா 11200,ரூபா 7000,ரூபா 3000 ஆக மதிப்பிடப்பட்டது.

முடிவுறாத ஒப்பந்தங்களுக்கான இலாப கணக்கீட்டின் அடிப்படையில், மூன்று வருடங்களுக்குமான ஒப்பந்தக் கணக்கினைத் தயார் செய்க.

(20 புள்ளிகள்)